Maalai Sudar

மாலைச்சுடர்

16/03/2018

Page # 02

# சென்னையில் சூர்யோதய் சிறு நிதி வங்கி கிளை தொடக்கம்

**சென்னை, மார்ச் 16:**

**முன்னாள் வங்கியாளர்களை பங்காளர்களாக கொண்டு, சூர்யோதய் சிறு நிதி வங்கி தனது முதல் வங்கி கிளையினை சென்னையில் தொடங்கியுள்ளது.**

சென்னையில், சூர்யோதய் சிறு நிதி வங்கியின் கிளை தொடங்கப்பட்டது. வங்கியின் மேலாண் இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் பாஸ்கர் பாபு பங்கேற்று வங்கி கிளையை திறந்துவைத்தார். இது குறித்து பாஸ்கர் பாபு கூறியதாவது: முன்னாள் வங்கியாளர்களுடன் இணைந்து, அவர்களது பங்காண்மைக்கும் தொழில்முனைவுத் தன்மைக்கும் ஊக்கம் அளிக்கும் வகையில், பங்காண்மையர் வங்கிக் கிளை ஒன்றினை முதன்முதலாக சென்னையில் திறந்துள்ளோம். வலிமையான ஆளுமை, வெளிப்படைத் தன்மை, வாடிக்கையாளர்களுக்கான உயர்தர சேவை அனுபவம் ஆகியவையே சூர்யோதய் சிறு நிதி வங்கியின் முக்கிய குறிக்கோள்களாகும்.

முன்னாள் வங்கியாளர்கள் இதன் பங்காளர்களாக இருப்பதால், வாடிக்கையாளர்களின் தேவை அறிந்து சேவை வழங்க முடியும். இது ஒரு தனித்துவமிக்க வணிக முன்மாதிரியாக அமைவதால் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று எதிர்ப்பார்க்கிறோம். இந்த செயல்பாடுகள் வெற்றியடைந்தால், அடுத்த நிதியாண்டில் எங்களது 216 குறு நிதி கிளைகளை வங்கிக் கிளைகளாக மாற்றியமைக்க உள்ளோம். சூர்யோதய் சிறு நிதி வங்கியின் சொத்துகள் மற்றும் இருப்பு திடமான நிலையில் உள்ளது. 2018-ம் நிதியாண்டின் 3-வது காலாண்டு முடிவில் ரூ. 500 கோடிக்கும் மேற்பட்ட வைப்புத் தொகை இவ்வங்கியில் இருந்தது, குறிப்பிடத்தக்கது.